# Ubin Tides

乌敏岛
ISSUE 5
May 2020 - October 2020
PULAU UBIN

## கிராமப்புற வீடுகளைப் பழுதுபார்த்தல்

உபின் தீவின் கிராமவாசிகளுக்குக் கிராம வீடுகளில் தங்கிக் கொள்ள மற்றும் வளாக சுற்றுப்புறங்களைப் பயன்படுத்த தற்காலிகக் குடியிருப்பு உரிமங்கள் (TOL) வழங்கப்பட்டுள்ளன. TOL வழங்கப்படுவதற்கான நிபந்தனையாவது கிராமவாசிகள் அவர்களின் வீட்டை மற்றும் சுற்றுப்புறங்களைச் சுத்தமாகப் பராமரித்து வைத்துக் கொள்வது ஆகும். இருப்பினும், சில கிராமவாசிகள் அவர்களின் நிதிநிலைமைக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட, தேவையான பழுதுபார்க்கும் பணிகளை முடிக்க NParks-இன் உதவியைக் கோரினர்.

இது போன்ற கோரிக்கைகள், ஒவ்வொரு கோரிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது - கிராமவாசிகள் சிறிய பழுதுகளைத் தாமே அழகியல் சார்ந்த புதுமையான வழிகளில் செய்துகொள்ள, NParks இந்த வேலைகளைச் செய்ய கிராமவாசிகள் மற்றும் இதில் உதவ விரும்பும் சமுதாயக் குழுக்களை இணைத்துச் செயல்படுத்துகிறது. துரதிருஷ்டவசமாக இவற்றில் தங்கியிருந்த காலமாகிவிட்ட கிராமத்து முதியவர்களின் வீட்டை அவர்களின் வாரிசுகளுக்கு, NParks தேவைப்படும் பழுதுபார்ப்புப் பணிகளை முடித்து புதிய TOL-ஐ அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யும்.

இந்தச் செயல்முறையில் பாதுகாப்பு ஆய்வுகளைச் செய்தல், கட்டிடக் கட்டமைப்பு வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைத் துறைசார்ந்த அதிகாரிகளுக்குச் சமர்ப்பித்தல் ஆகிய பணிகள் அடங்கும். இந்தப் பழுதுபார்ப்புச் செயல்முறையில், ஒவ்வொரு கிராமப்புற வீட்டின் அசல் வடிவமைப்பு, குடியிருப்போரின் பாதுகாப்புக்கு எந்தப் பங்கமும் இல்லாமல் பராமரிக்கப்படுகிறது. இந்தப் பழுதுபார்ப்புப் பணிகளில் உள்ளடங்குபவை கூரை மற்றும் தரைத்தளத்தைச் சீரமைத்தல், கட்டுமான அடிப்படையை மற்றும் தூண்களை வலுவாக்குதல் மற்றும் கறையான் அல்லது செல்லரித்துச் சிதிலமடைந்த மரத்தினாலான தளவாடங்களை மாற்றுதல் ஆகியவை ஆகும்.



NParks பழுதுபார்த்த ஆறு வீடுகளில் வீட்டு எண். 239-ம் ஒன்றாகும்.



வீட்டு எண். 239 பழுதுபார்ப்புக்குமுன்பு



நவம்பர் 2019-இல் பணிகள் நிறைவடைந்த பின்பு

வீட்டு எண் 760D-இன் பாதுகாப்பான குடியிருப்புக்காக அடிப்படைத் கட்டமைப்புப் பழுதுபார்ப்பிற்கு NParks உதவியுள்ளது.



தரைத் தளத்தைப் புதியதாக மாற்றியமைத்தல்



வீட்டு எண் 760D பழுதுபார்ப்பிற்குப் பின்பு

## உபின் தீவு வாழிட மேம்பாட்டுத் திட்டம்

தலைமை கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள பெக்கன் குவாரி, உபின் தீவின் கைவிடப்பட்ட திறந்த சுரங்கங்களில் ஒன்று. அங்கு அதிக எண்ணிக்கையிலான கொக்கரிக்கும் சாம்பல் கொக்குகள் (ஆர்டியா சினேரியா) உள்ளன. இந்தக் கொக்குகள் இந்தச் சுரங்கங்களின் விளிம்புகளில் உள்ள மரங்களில் வழக்கமாகக் கூடுகள் கட்டுகின்றன, ஆனால் நீர்மட்டம் உயரும் நேரங்களில், அவைகளால் கூடுகளைக் கட்ட முடிவதில்லை.



மிதவை மேடையில் தாவரங்களை வளர்க்க வேண்டிய மண்ணைக் கொட்டிப் புதிய மிதவை சதுப்புநிலங்கள் அமைக்கப் படுகின்றன.



மிதவைச் சதுப்புநிலத்தில் சரியான இடைவெளி விட்டு வளர்க்கப்படும் தாவரங்கள், மற்றும் வனவிலங்குகளுக்கான வாழ்விடச் சூழலை அமைக்கும் மரத்தடிகள் மற்றும் கூழாங்கற்கள்.

### மிதவை சதுப்புநிலங்களை நிறுவுதல்

பெக்கன் குவாரியில் வாழிட மேம்பாடு 2015-ஆம் ஆண்டு மிதவை சதுப்புநிலங்கள் திட்டத்துடன் தொடங்கியது. மிதவை சதுப்புநிலங்கள் நீர் நிலையங்களில் மிதக்கும் கட்டமைப்புகள். இவை வனவிலங்குகளுக்குத் தேவையான தாவரங்களை கொண்டு அவற்றுக்கு வேண்டிய வாழிடமாகவும், அப்பகுதியை அழகாக்கவும், நீரின் தரத்தை மேம்படுத்தவும் அமைக்கப்பட்டன. இவற்றை நிறுவிய பின்பு, இந்த முன்னோடி மிதவை சதுப்புநிலங்கள் சாம்பல் கொக்குகளை ஈர்த்தன. பிற வனவிலங்குகளாகிய கருநீல கொக்கு (ஆர்டியா பர்புரியா), மீன்கொத்திப் பறவைகள் மற்றும் ஆட்டர் ஆகியவற்றையும் இங்கு ஈர்த்தன. இந்தச் சதுப்புநிலங்களில் அவை ஓய்வெடுப்பதை அல்லது இரை தேடுவதைக் காண முடிந்தது.

### அடுத்த நடவடிக்கைகள்

இந்த முன்னோடி திட்டத்தின் வெற்றிக்குப் பின்னர், அடுத்தக்கட்ட முன்னேற்றமாக, அதிக எண்ணிக்கையில் மிதவை சதுப்புநில அமைப்புகள் மற்றும் கொக்குகளின் கூடுகளுக்கான தளங்களை அமைப்பதில் முன்னேற்றம் கண்டோம். மிதவை சதுப்புநில அமைப்புகள் சதுப்புநிலத் தாவரங்கள், மற்றும் வனவிலங்குகள் வாழ்வதற்கேற்ற மரம் செடிகொடிகளைக் கொண்டுள்ளன. பெக்கன் குவாரியில் இந்தப் பல்லுயிர்ச் சூழல் தொடர்ந்து செழிப்படைவதைப் நாம் எதிர்பார்க்கிறோம்!

# உபின் தீவில் வசிக்கும் சமுதாயத் தொடர்புக் குழு

2016-ஆண்டின் நடுவில் **NParks** உபின் தீவின் நடுவண் மேலாண்மை முகமையாகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து, பிரண்ட்ஸ் ஆஃப் உபின் நெட்வொர்க் (FUN) உடன் சேர்ந்து, உபின் தீவின் கிராமவாசிகளை ஈடுபடுத்தி, அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுக் காண உதவுகிறது. ஆகஸ்ட் 2019-இல், நாம் சமுதாயத் தொடர்புக் குழுவை (CLT) இந்த நோக்கத்துக்காக அமைத்து அர்ப்பணித்தோம். கிராமவாசிகளின் செயலூக்கமுள்ள ஈடுபாட்டின் மூலம், இக்குழு அடிப்படைக் கட்டமைப்பு நிறுவனங்கள் மற்றும் பிற முகமைகளுடன் இது போன்ற சமூகப் பிரச்சனைகளுக்கான ஆதார வளங்களைப் பெறுதல் மற்றும் திட்டங்களை ஒருங்கமைத்தல் ஆகியவற்றில் இணைந்து பணியாற்றி கருத்துகளையும் சேகரிக்கிறது.



## தண்ணீர்ப் பை விநியோகம்

கடந்த ஆகஸ்ட் முதல் செப்டம்பர் 2019 வரையில் நிலவிய கடுமையான வறட்சிக் காலத்தில் கிராமவாசிகள் அவர்களின் கிணறுகள் வறண்டு போனதைத் தெரிவித்தனர். NParks, PUB உடன் தொடர்பு கொண்டு கிராமவாசிகளின் குடிநீர் மற்றும் சமையலுக்குத் தேவையான நீரை வழங்க விரைந்து ஏற்பாடுகளைச் செய்தது.

## உடல்நலப் பரிசோதனைகள் மற்றும் ஆற்றுப்படுத்துதல்

கிராமவாசிகளில் உள்ள முதியவர்களில் பலர் உயர் இரத்த அழுத்தம், உயர் இரத்தக்கொழுப்பு மற்றும் நீரிழிவு போன்ற நோய்களை உடையவர்களாதலால், உபின் கிராமவாசிகளுக்கு உடல்நலப் பராமரிப்பு முக்கியமான பிரச்சனை ஆகும். ஜனவரி 2020-இல் CLT, சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்துடன் (SRC) எட்டு தன்னார்வத்தொண்டு செவிலியர்களுடன் இணைந்து கிராமவாசிகளுக்கு அடிப்படை உடல்நலப் பரிசோதனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தது. NParks, SRC உடன் சேர்ந்து உடல்நலப் பரிசோதனைகளுக்குப் பிறகு தொடர் கவனிப்புக்கு ஏற்பாடுகள் செய்யும்.



## கொவிட்-19 காலத்தில் வழங்கப்பட்ட உதவி







## முகக்கவசங்களை விநியோகித்தல்

NParks, சிக்லாப் தொகுதி அலுவலகத்துடன் (Siglap CO) சேர்ந்து பிப்ரவரி 2020-இல் கிராமவாசிகளுக்கு அறுவை சிகிச்சை முகக்கவசங்களை வழங்கியது. அதே நேரத்தில், NParks ஒரு தனியார் முதுமைக்கால மருத்துவ நிபுணரை அமர்த்தி கிராமவாசிகளுக்கு இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் சுகாதார நற்பழக்கங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்தது.

அதே மாதத்தில், NParks பங்குதாரர்களின் முயற்சிகளை உபின் சமூகத்துக்கு வழங்குவதற்கு ஆதரவளித்தது. ஃபுட்டுரெடி மற்றும் இன்னோடிரெக் ஆகிய தனியார் நிறுவனங்கள் புறவெளி முகாம்களை உபினில் அமைத்து, முகக் கவசம் மற்றும் கைக் கிருமிநாசினித் திரவம் ஆகியவற்றைக் கொண்ட WeCareKits-களை வழங்கியது.

சிக்லாப் தொகுதி அலுவலகத்துடன் இணைந்து, NParks மறுமுறை பயன்படுத்தக்கூடிய முகக் கவசங்கள் மற்றும் கிருமிநாசினித் திரவம் ஆகியவற்றை வழங்குவதில் ஒருங்கிணைப்பு செய்தது. இக்குழு தற்காலிக நிவாரண நிதிக்கு விண்ணப்பங்களை வழங்கியது.

படகோட்டிகள் மற்றும் வேன் ஓட்டுநர்கள் உட்பட கிராமவாசிகளுக்கு முகக் கவசங்கள் மற்றும் கிருமிநாசினித் திரவம் ஆகியவற்றை சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கமும் வழங்கியது.

## கிராமவாசிகளுக்குக் கூடுதல் உதவி

மார்ச் 2020-இல் அறுவை சிகிச்சைக்குப் பின் சக்கர நாற்காலி தேவைப்பட்ட கிராமவாசிக்கு அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறியதும் உபின் திரும்பத் தேவைப்பட்ட உதவி வழங்கப்பட்டது. NParks, அக்செசிபள் உபின் மூலம் சாங்கி பாயின்ட் பயணப்படகு நிலையத்திலிருந்து உபின் திரும்ப போக்குவரத்து உதவிகளை வழங்குவதில் பங்கேற்றது. ஹோம் நர்சிங் பவுண்டேஷனிலிருந்து இரண்டு செவிலியர்களைப் பெற்று கிராமவாசிக்குத் தேவைப்பட்ட தொடர் சேவை வழங்கவும் அவரது மனைவிக்குப் பராமரிப்புப் பயிற்சி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மே மாதத்திலும் அக்செசிபள் உபின் உடன் இணைந்து, நாம் கிராமவாசியின் மருத்துவச் சந்திப்பு மற்றும் வீடு திரும்புதலுக்கு வேண்டிய போக்குவரத்து ஏற்பாடுகளைத் தொடர்ந்து செய்து கொடுத்தோம்.

COVID-19 நடமாட்டக் கட்டுப்பாட்டுக் காலத்தில், உபினுக்கு வரும் வருகையாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. பம்போட் மூலம் நகரத்துக்குச் சென்று வந்த கிராமவாசிகள் ஒரு பம்போட் நிரம்புவதற்கு நீண்ட நேரம் எடுத்ததால் காத்திருக்க வேண்டியதிருந்தது அல்லது கூடுதல் பணம் செலுத்த வேண்டியதிருந்தது. இதற்குத் தீர்வாக, NParks 29 ஏப்ரல் 2020 முதல் ஒவ்வொரு புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி, பிற்பகல் 1 மணி மற்றும் மாலை 5 மணிக்கு இலவசப் படகுச் சவாரியை வழங்கியதன் மூலம் கிராமவாசிகள் நகரத்தில் அவர்களுக்குத் தேவையான மளிகை மற்றும் மருந்துகளை வாங்கிக் கொள்ள அல்லது குடும்ப உறுப்பினர்கள் அவர்களுக்கு மிகவும் தேவையான பொருட்களைக் கொண்டுவந்து தர முடிகிறது.



